சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலன் – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் - 2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை - மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - தாவரவியல் பூங்காவினைச் சீரமைத்தல் – நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (ப.க) துறை**

அரசாணை (நிலை) எண். 192

நாள்: 24 .08.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054,
சோபகிருது வருடம்,
ஆவணித் திங்கள் 7-ஆம் நாள்

படிக்க-

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகப் பதிவாளர் அவர்களது கடித எண். TNAU/ Agriculture Budget Announcement (2023-2024)/ 2023, நாள் 21.04.2023, 27.05.2023, 03.06.2023 மற்றும் 05.07.2023.

*****

**ஆணை:**

2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:

56) தாவரவியல் பூங்காவினைச் சீரமைத்தல்

கோவை மாநகரத்தில் புகழ்பெற்றுத் திகழ்வது பல்கலைக்கழகத்தின் தாவரவியல் பூங்கா. முகலாய தோட்டம், ஜப்பானிய தோட்டம், கருங்கல் தோட்டம், தாவர வடிவமைப்பு, கிளைவிட்ட பனைமரம் என்று பலவிதமான அம்சங்களைக் கொண்ட இத்தாவரவியல் பூங்கா, பலருக்கும் இளைப்பாறுதல் தரும் இயற்கையின் அழைப்பு; இனிமையின் தொகுப்பு; பொழுதுபோகாதவர்களும் மனதைப் பழுதுபார்க்க உதவும் பூங்காற்று தாலாட்டும் பூங்கா. மாணவர்கள் மலர்களைப் பற்றியும், அலங்கார செடிகளைப் பற்றியும் அறிந்து கொள்ள மிகவும் உதவியாக இருக்கும். இங்கு பகல் நேரத்தில் ஆராய்ச்சி

மாணவர்கள் பூச்சிகளைப் பிடிக்கவும், தாவரங்களைப் பற்றி அறியவும் தவம் இருப்பதைப் பார்க்கலாம். அரிய வகைத் தாவரங்களைப் பாதுகாப்பதும், அறிவியல் பூர்வமான மலரியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும், பூங்காவின் முக்கிய நோக்கம். இந்தத் தாவரவியல் பூங்கா மிகவும் பழமையானது. இதில் அரிதான, அழிவின் விளிம்பில் உள்ள தாவர பல்லுயிர் செல்வத்தை மேம்படுத்தவும், பல்வகை சிறப்பு வாய்ந்த பூங்காக்களை நிறுவவும், தொழில் முனைவோர் பயிற்சிகளை அளிக்கவும் உதவியாக இருக்கும்பொருட்டு, இதைச் சீரமைக்க, வரும் ஆண்டில் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளரது மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தாவரவியல் பூங்காவினைச் சீரமைக்கக் கோரும் கருத்துருவினை அரசுக்கு அனுப்பியிருந்தார்:-

(அ) திட்டத்தின் அடிப்படை

'பாரம்பரிய பல்லுயிரியல் தளம்' என்ற அடையாளத்தை கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தாவரவியல் பூங்காவானது தாவரங்களை பாதுகாத்தல் மற்றும் அறிவியல் பூர்வமான மலரியல் ஆராய்ச்சிகளை முதன்மை பணியாக கொண்டுள்ளது.

மேலும், ஏறத்தாழ 50 ஏக்கர் பரப்பளவில் அமைதியான சூழலில் அமைந்துள்ள இந்த பூங்கா பல்வேறு பூர்வீக மற்றும் அந்நிய தாவர வளங்களுக்கு புகலிடமாக திகழ்கிறது.

(ஆ) திட்டத்தின் குறிக்கோள்கள்:

i. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவரவியல் பூங்காவில் உள்ள அரிதான மற்றும் அழிவின் விளிம்பில் உள்ள (rare, endangered and threatened plant species) தாவர பல்லுயிரியல் செல்வத்தை மேம்படுத்துதல்.

ii. பல்வகை சிறப்பு வாய்ந்த பூங்காக்களை (special gardens) நிறுவுதல் .

iii. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் பூங்காவினை மேம்படுத்துவதன் மூலம் மலரியல் மற்றும் நிலஎழிலூட்டுதல் சார்ந்த கல்வி மற்றும் ஆராய்ச்சிகளை வலுப்படுத்துதல்.

(இ) திட்ட காலம் :

1 வருடம்

(ஈ) திட்டத்தின் செயல்பாடுகள்:

1. பல்வகை சிறப்பு வாய்ந்த பூங்காக்களை (special gardens) நிறுவுதல் - தோட்டக்கலை சிகிச்சை பூங்கா, முகலாய பூங்கா, நீர்வாழ் தோட்டம், ஆர்கிட் மலர்தோட்டம் மற்றும் அலங்கார கள்ளி கற்றாழைகளுக்கான சிறப்புத் தோட்டங்களை அமைத்தல்.

2. அரிய வகை மற்றும் அழிவின் விளம்பில் உள்ள (rare, endangered and threatened plant species) தாவர பல்லுயிரியல் செல்வத்தை மேம்படுத்துதல்.

3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் பூங்காவினை மேம்படுத்தி தாவரங்களை பாதுகாத்தல், தொழில்-முனைவோர், வேலைவாய்ப்புத் திறன் பயிற்சிகளை அளித்தல், கல்வி மற்றும் ஆராய்ச்சிகளை வலுப்படுத்துதல்.

(உ) பயனாளிகள்:

பொதுமக்கள், விவசாயிகள், இளையோர், வயோதிகர், குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பள்ளி மாணவர்கள், இளநிலை முதுநிலை கல்லூரி மாணவர்கள், நில எழிலூட்டும் நிபுணர் மற்றும் பயிற்சியாளர்கள்.

(ஊ) நிதி ஒதுக்கீடு : ரூபாய் 5 கோடி

<table>
<tr><th>வ.எண்.</th><th>விவரங்கள்</th><th>தொகை (ரூபாய் இலட்சத்தில்)</th></tr>
<tr><td>(I)</td><td colspan="2">பல்வகை சிறப்பு வாய்ந்த பூங்காக்களை நிறுவுதல்</td></tr>
<tr><td>i.</td><td>மனித மனநிலை மேம்பாட்டிற்கான சிறப்பு பூங்காக்கள்
<table>
<tr><th>வ. எண்.</th><th>பொருள்</th><th>பரப்பளவு (சதுரடியில்)</th><th>இனங்களின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>தரைதள நடை தோட்டம்</td><td>10000</td><td>40</td></tr>
</table></td><td>140.00</td></tr>
</table>

| வ. எண். | பொருள் | பரப்பளவு (சதுரடியில்) | இனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2 | மாற்றுத் திறனாளிகளின் செயல்பாட்டு பூங்கா | 10000 | 50 |
| 3 | தியானத்தோட்டம் | 10000 | 50 |
| 4 | மறுவாழ்வுப் பூங்கா | 7500 | 50 |
| 5 | வண்ணத்துப்பூச்சிகள் பூங்கா | 5000 | 27 |
| 6 | மறுசீரமைப்பு பூங்கா | 7500 | 30 |
| 7 | இயற்கை நுழைவுவாயில் | 500 | 10 |
| 8 | சாலைகள், பாதைகள் மற்றும் திறந்தவெளி | 15000 | 3 |
| | | 65500 | 260 |

| | | |
|---|---|---|
| ii. | முகலாய பூங்கா (1 ஏக்கர்) அலங்கார சமச்சீர் தோட்டம் அமைத்தல் மேலும் 12 நுழைவாயில் கூண்டு பரதாரி (Baradari) நீர்வீழ்ச்சி, நீர் ஊற்றுகள் மற்றும் 25 விதமான மலர்ச்செடி, புதர் மற்றும் மரவகைகளுடன் மனதை மயக்கும் முகலாயத் தோட்டம் | 60.00 |
| iii. | நீர்நிலை பூங்கா - தாமரை, அல்லி மற்றும் சதுப்புநில மலர்ச்செடிகள் (0.25 ஏக்கர் 15 வித செடிகள்) | 20.00 |
| iv. | ஆர்க்கிட், கள்ளி மற்றும் சதைப்பற்று கொண்ட அலங்கார தாவர பூங்கா உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும் வன பகுதி சேகரிப்பு 150 இனங்கள் கள்ளி கற்றாழை (0.25 ஏக்கர்) 100 இனங்கள் | 50.00 |
| | கூட்டுத்தொகை I (18% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) | 270.00 |
| (II) | **அரிய வகை மற்றும் அழிவின் விளிம்பில் உள்ள அலங்கார தாவர பல்லுயிரியல் செல்வத்தை மேம்படுத்துதல்** | |
| i. | உயரிய தொழில்நுட்ப பசுமைக்குடில் மற்றும் பசுமைக்கூடாரம் காலநிலை கட்டுப்பாட்டு வசதியுடன் 1000 சதுரமீட்டரில் பசுமைக்கூடாரம், ஒளி விளக்குகள், நிழல்வலை மற்றும் குளிரூட்டிகள் அமைத்தல், கம்பிவலை நகரும் மேசைகள் (500 ச.மீ) நீர் தூவுவான் மற்றும் பனி பொழியும் நிழல் வலைக் கூடாரம் (500 ச.மீ) | 60.00 |

| | | |
|---|---|---|
| ii. | அரிய மற்றும் அச்சுறுத்தலில் உள்ள அதிக மதிப்புள்ள அழகுத்தாவரங்களையும் மூலிகைச் செடிகளையும் சேகரித்து பாதுகாத்தல் - ஆண்டுக்கு 100 என்ற அளவில் 300 இனங்கள் சேகரித்தல் | 50.00 |
| iii. | அரிய வகை தாவரங்களை பாதுகாப்பதற்கு தேவையான உயர் தொழில்நுட்பங்கள் நீர்ப் பாசன வசதிகள் அமைத்தல் - நீர் ஆதார அமைப்பை உருவாக்குதல், திறனுடைய நீர்ஏற்றி, உப்பு அகற்றுதல், நீர் சேமிக்கும் கலன்கள், நீர்க்குழாய் வலையமைப்பு, சொட்டுநீர், தெளிப்புநீர், மழை தெளிப்பான், நீர் ஊற்று, பனி தூவுவான் மற்றும் தானியங்கி நீர்பாசன கட்டுப்பாட்டு அமைத்தல் | 30.00 |
| | கூட்டுத்தொகை II (18% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) | 140.00 |
| **(III)** | **நாற்றங்கால், ஆராய்ச்சி மற்றும் கல்வி மேம்பாடு** | |
| i. | தாவர மற்றும் பூங்கா இடு பொருட்களின் விற்பனையை மேம்படுத்துவதற்கான வசதிகளை நிறுவுதல் - ஏற்கனவே உள்ள நாற்றங்காலை புதுப்பித்து நாற்று உற்பத்தியினை தற்போது உள்ள ஆண்டுக்கு 25,000 என்ற அளவிலிருந்து ஆண்டுக்கு 2 இலட்சமாக உயர்த்துதல் | 20.00 |
| ii. | தாவரவியல் பூங்காவை கணினிமயமாக்குதல் (பொது மக்கள் பயன்பாட்டிற்கு விரைவுத் தகவல் குறியீடுகள் மற்றும் இணையதளம்) இணையதளம் மூலம் பூங்காவில் உள்ள செடி கொடிகளை கண்டறியவும், அவற்றின் தாவரவியல் அறிவியலினை தெரிந்து கொள்ளவும் கணிணிக் குறியீடுகள் மூலம் விளக்க பலகைகள் அமைத்தல், மேலும், இணையதளம் மூலம் தாவரவியலாருடனும் நில எழிலூட்டும் நிபுணர்களிடமும் கலந்துரையாடி தெளிவு பெறும் வசதி ஏற்படுத்துதல் | 20.00 |
| iii. | கழிவு மேலாண்மை மற்றும் உரமாக்கும் வசதிகளை ஏற்படுத்துதல் - பூங்கா கழிவுகளை மறு சுழற்சி செய்தல், தாவரவியல் பூங்காவினையும் பல்கலைக் கழகத்தையும் ஒரு சுத்தமான பசுமைப் பிரதேசமாக மாற்ற தாவரக் கழிவுகளை உரமாக மாற்றும் கட்டமைப்புகள் நிறுவுதல் | 10.00 |

| | | |
|---|---|---|
| iv. | சுத்தமான மற்றும் பசுமை சக்தியினை பயன்படுத்துதல், சூரிய ஒளி மின்சாரத்தின் மூலம் ஒளிவிளக்குகள் அலங்கார நீர் ஊற்றுகள், சுத்தமான குடிநீர் அளித்தல், குழந்தைகள், பார்வையாளர்கள் ஆகியோரது பாதுகாப்பை உறுதி செய்ய தீ தடுப்பான், முதலுதவி மற்றும் மருத்துவ சேவை வழங்குதல், சிறுவர் பூங்காவில் பாதுகாப்பான தரை அமைத்தல், பாதுகாப்பு கவசங்கள், தலை கவசம், கையுறை முதலியன பயிற்சியாளருக்கு வழங்குதல். | 40.00 |
| | **கூட்டுத்தொகை III (18% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட)** | **90.00** |
| | **மொத்தம் (I + II + III )** | **500.00** |

<u>(எ) திட்டத்தின் பயன்கள்:</u>

- அறிவியல் மற்றும் பாரம்பரிய முக்கியத்துவம் வாய்ந்த அரிதான மற்றும் அழிவின் விளிம்பில் இருக்கும் தாவர வகைகள் பாதுகாக்கப்படும்.
- மனித மனநிலை மேம்பாட்டு பூங்கா இந்தியாவிலேயே முதன்மையானதாகும்.
- மலரியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மூலம் மாணவர்கள் மேம்பாடு சாத்தியமாகும் .
- மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு திறன்கள் உருவாக்கப்படும்.
- கோவை வாழ் மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட மற்றும் அறிவியல் சார்ந்த பொழுது போக்கு மையம்.
- மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கான அலங்காரத் தோட்டம் மற்றும் வாழ்வாதாரத்திற்கான மலர்சார்ந்த தொழில் பயிற்சி அளித்தல்.
- மலரியல் மற்றும் அலங்காரத் தோட்டத்திற்கான தகவல் மையமாக செயல்படுதல்.

3. மேலே பத்தி.2-இல் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளரது கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவரவியல் பூங்காவினை சீரமைப்பது குறித்த அறிவிப்பினை செயல்படுத்த பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:-

..7..

i. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தாவரவியல் பூங்காவினைச் சீரமைக்க கீழ்கண்டவாறு ரூபாய் 5,00,00,000/- க்கு (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) நிருவாக ஒப்புதலும் மற்றும் முதல் தவணையாக 2023-2024-ம் நிதியாண்டில் ரூ.2,50,00,000/- க்கு (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் செய்யப்படுகிறது;

| வ. எண். | விவரங்கள் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| I. | பல்வகை சிறப்பு வாய்ந்த பூங்காக்களை நிறுவுதல் | 270.00 |
| II. | அரிய வகை மற்றும் அழிவின் விளம்பில் உள்ள அலங்கார தாவர பல்லுயிரியல் செல்வத்தை மேம்படுத்துதல் | 140.00 |
| III. | நாற்றங்கால், ஆராய்ச்சி மற்றும் கல்வி மேம்பாடு | 90.00 |
| | **மொத்தம் (I + II + III )** | 500.00 |

ii. மேலே பத்தி 3(i)-ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.2.50 கோடி தொகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை பொறுத்து மீதித்தொகை விடுவிக்கப்படும்;

iii. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிதிக்குழுவின் ஒப்புதலை பெற்ற பின்னர்தான் இத்திட்டத்தினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் செயல்படுத்த வேண்டும், குறிப்பாக ஒட்டுமொத்த ஒதுக்கீட்டிற்கு (Lumpsum Provision) ஒப்புதல் பெறப்பட வேண்டும். விரிவான விவரக் குறிப்புகள் மற்றும் விலை குறித்த விவரங்கள் நிதிக்குழுவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்;

iv. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் வசூலிக்கப்படும் கட்டணம் (தற்போது நடைமுறையில் உள்ள நுழைவுக் கட்டணம்) மற்றும் ஆராய்ச்சிக் கட்டணம் (வெளியாட்களுக்கு) ஆகியவை தனி வங்கிக் கணக்கில் பராமரிக்கப்பட்டு, நிதிக்குழு மற்றும் பரவலாக்கப்பட்ட வரவு செலவு திட்டக் (Decentralized Budget) கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:- (Demand No.005-08)

2415 - வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும்-01 பயிர் வளர்ப்பு - 004 ஆராய்ச்சி-மாநிலச் செலவினங்கள் BG தாவரவியல் பூங்காவினைச் சீரமைத்தல் -309 உதவித்தொகை -03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை.

(IFHRMS DPC : 2415 01 004 BG 309 03)

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணி குறித்ததாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச்செலவு நிதியிலிருந்து முன் பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வசெ.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானியக் கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு எதிர்பாராச்செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாராச்செலவு நிதி விதிகள், 1963-ன் இணைப்பில் உள்ள படிவம் "அ"-வின்படி இவ்வரசாணையுடன் நிதித் (வசெ.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2023-2024-ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதித் (வ.செ.பொ.1/வே-உ.ந) துறைக்கு அனுப்புமாறு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே, பத்தி 4-ல் துவக்கப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

7. மேலே, பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கிட வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

8. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.273/ADS(GKT)/2023, நாள்: 24.08.2023-இல் வழங்கிய ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 795 (எழுநூற்று தொண்ணூற்று ஐந்து) (IFHRMS ASL No. 2023080795).

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,கோயம்புத்தூர்-641003.
வேளாண்மை ஆணையர், சென்னை-600 005.
வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர்-641003.

முதன்மை மாநில கணக்காயர் (G&SSA/ E&RSA), சென்னை-600 018
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர்-641 018.
துணை இயக்குநர், உள் தணிக்கை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்- 641 003.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை-600 009.

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத்துறை, சென்னை-600 009.
நிதித் (வேளாண்மை - உ ந/வ.செ.பொ.I/II/வ.வ.I) துறை, சென்னை-600 009.
வேளாண்மை – உழவர் நலத் (அ.ந.மு.3 / வ (ம) தி) துறை, சென்னை-600 009.
கோப்பு எண்.1388/பக/2023.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25/08/2023
பிரிவு அலுவலர்
25/8/2023